# நீர்கொழும்பு மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகளை 2026-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடனான கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| தொ. இல. | குத்தகையின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | காமச்சோடை புதன் சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 19,164,600.00 | 380,000.00 | 3,000.00 |
| 02 | காமச்சோடை ஞாயிறு சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 21,894,600.00 | 437,000.00 | 3,000.00 |
| 03 | சனிக்கிழமை இரவுச் சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 18,564,000.00 | 370,000.00 | 3,000.00 |
| 04 | கொச்சிக்கடை ஞாயிறு சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 3,276,105.00 | 65,000.00 | 3,000.00 |
| 05 | அலியாபொல தினசரி சந்தையை குத்தகைக்கு வழங்குதல் | 371,000.00 | 7,000.00 | 3,000.00 |
| 06 | பீ சந்தைக் கட்டிடத்தொகுதியின் பின்புறமுள்ள மலசலகூட முறைமை | 172,000.00 | 3,000.00 | 3,000.00 |
| 07 | நீர்கொழும்பு பிரதான பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மலசலகூட முறைமை | 1,400,000.00 | 28,000.00 | 3,000.00 |
| 08 | பழைய சிலாபம் வீதி வாகனத்தரிப்பிடம் | 960,000.00 | 19,000.00 | 3,000.00 |
| 09 | புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதிக்கு அண்மையிலுள்ள வாகனத் தரிப்பிடம் | 1,320,000.00 | 26,400.00 | 3,000.00 |
| 10 | மீபுர திரையரங்கிற்கு பின்னாலுள்ள காணியின் எண்ணெய் விநியோக நிலையம் | 840,600.00 | 16,000.00 | 3,000.00 |
| 11 | காமச்சோடை வாரச்சந்தைக்கு முன்னாலுள்ள வாகனத் தரிப்பிடத்தை குத்தகைக்கு வழங்குதல் | 428,000.00 | 8,000.00 | 3,000.00 |
| 12 | நீர்கொழும்பு பமுனுகம பிரதான வீதி வாகனத் தரிப்பிடத்தில் கட்டணம் அறவிடுதல் | 800,000.00 | 16,000.00 | 3,000.00 |

கேள்வி விண்ணப்பப்படிவ விநியோகம் - 2025-10-22ஆம் திகதி முதல் 2025-11-06ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில்

கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் - 2025-11-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விப் படிவங்களைத் திறத்தல் - 2025-11-07ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

**நிபந்தனைகள்**

1. சகல கேள்விகளும் அவைகளை குத்தகைக்கு வழங்கும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்டபூர்வமாக செல்லுபடியாகும்.
2. இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.
4. விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கேள்விப் பிணை முறி ரொக்கப் பணமாக அல்லது 06 மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றாகவிருத்தல் வேண்டும்.
6. வெற்றிகரமான கேள்விதாரரினால் விபரமான கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 02 வாரங்களுக்குள் வைப்புச் செய்து உடன்படிக்கைக்கு வர வேண்டும்.
7. உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் மற்றும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடமிருந்து (031-2281987) அறிந்து கொள்ளலாம்.
8. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.
9. இந்த கேள்வி கோரல் தொடர்பில் மாநகர ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2025-10-17ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**